# பூநகரிப் பாதை திறப்பு: ஒப்பந்தம் தயாரிக்க முயற்சி

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 29 இதழ் 116

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 11 — 06 — 1993

(யாழ்ப்பாணம்)

பூநகரிப் பாதை திறப்பது சம்பந்தமான ஒழுங்குமுறைகளை கொண்ட ஒப்பந்தம் ஒன்றை உருவாக்குவதுபற்றி விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளும், அகதிகளுக்கான ஐ.நா. தூதரக கொழும்பு வதிவிடப்பிரதிநிதி கலாநிதி பீற்றர் நிக்கிலசும் நேற்றுவிரிவாக ஆராய்ந்தனர்.

நேற்றுக்காலை சுமார் ஒன்றரை மணித்தியாலம் வரை இரு தரப்பினருக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் குறிப்பிடத்தக்க (4-ம் பக்கம் பார்க்க)

## தமிழரை கைது செய்வதில் கொழும்பில் புதியநடைமுறை

(கொழும்பு)

கொழும்பில் தகுந்த ஆதாரம் இல்லாமல் இனிமேல் தமிழர்கள் கைது செய்யப்படமாட்டார்கள் என்று பாதுகாப்பு அதிகாரிகள் நேற்று அறிவித்துள்ளனர்.

கொழும்பில் பாதுகாப்பின் நிமித்தம் இனிமேல் கைது செய்யப்படுபவர்கள் சம்பந்தமான புதிய திட்டம் தற்போது தயாரிக்கப்படுவதாகவும் பாதுகாப்பு அதிகாரிகள் 4-ம் பக்கம் பார்க்க

## மன்னாரில் புலிகள் அதிரடி 5 பொலிஸார் பலி

(மன்னார்)

மன்னாரில் பொலிஸ் காவலரண் மீது விடுதலைப் புலிகள் நேற்று மேற்கொண்ட குறுகிய நேர அதிரடித் தாக்குதலில் ஐந்து பொலிசார் கொல்லப்பட்டனர் பெருமளவு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள தள்ளாடி இராணுவமுகாமுக்கும் மன்னார் தீவுக்குமிடையேயுள்ள பொலிஸ் காவலரண்மீது நடைபெற்ற இத்தாக்குதல் சுமார் 7 நிமிட நேரம் மட்டுமே இடம்பெற்றது.

நேற்றைய தாக்குதலின்போது 4 பொலிசார் ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர் காயமடைந்த இரு பொலிசாரில் ஒருவர் பின்னர் மருத்துவமனையில் உயிரிழந்தார். (4ம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்களின் துயர் நிலையை ஜனாதிபதி டி. பிக்கு கூறுவோம்

## சமாதானக்குழு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"தமிழீழ மக்கள் எதிர்கொள்ளும் துயரநிலை குறித்து ஜனாதிபதி டி. பி' விஜேதுங்கவிடம் விரிவாக எடுத்துவிளக்குவோம் அத்துடன் விடுதலைப் புலிகள் இயக்கமும் மற்றும் வெகுஜன அமைப்புகளும் தெரிவித்துள்ள ஆக்கபூர்வமான கருத்துக்களை ஜனாதிபதிக்கு எடுத்து விளக்கி இப்பகுதியில் ஒரு சமாதான சூழலை உருவாக்கும் முயற்சியிலும் நாம் ஈடுபடுவோம்.'' இவ்வாறு யாழ் வந்துள்ள சர்வதேச சமாதானக் குழுவினர் நேற்று தெரிவித்தனர். (4ம் பக்கம் பார்க்க)

## போர்க்கைதிகள் விடுவிப்பு: அரசு புலிகளுடன் தொடர்பு

(கொழும்பு)

போர்க் கைதிகளை விடுதலை செய்வது குறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள 39 பொலிசாரை புலிகள் விடுதலை செய்யும் பட்சத்தில் அரசும் போராளிகளை விடுதலை செய் (4-ம் பக்கம் பார்க்க)

## தமிழ்ப் பெண்களும் கைது

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா கொலை செய்யப்பட்டதையடுத்து கொழும்பிலும் அதன் சுற்றுப் பகுதிகளிலும் பல தமிழ்ப் பெண்களும் கைதுசெய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் தமிழர் கைது செய்யப்படுவதை எதிர்த்து பல அரசியல் வாதிகள் குரல் எழுப்பியுள்ளதாகவும் ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. (இ

## கிளாலி-பூநகரி படகுச்சேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி பூநகரி படகுச் சேவைஇன்றுவெள்ளிக்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும்எனதமிழீழவிடுதலைப் புலிகளின் நிதித்துறை அறிவித்துள்ளது.

## வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு அரசியல்வாதிகளே காரணம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்குப்பிரச்னைக்கு அப்போதுள்ள சிங்கள அரசியல் வாதிகளும் தமிழ் அரசியல் வாதிகளும்தான் காரணமாக உள்ளனர். இவ்வாறு நேற்று ஆனர் இல்லத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் மலேஷிய (4-ம் பக்கம் பார்க்க)

## சமாதானக் குழுவினர் புலிகள் பாதுகாப்பிலுள்ள பொலிஸாரை சந்தித்தனர்

(யாழ்ப்பாணம்)

தம்மை விடுவிக்க ஸ்ரீலங்கா அரசு விரைவில் நடவடிக்கை எடுக்கத் தவறினால் தாம் திட்டமிட்டபடி எதிர்வரும் 13 ம் திகதி முதல் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப்போவ (4ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் 3,000 ராணுவத்தினருடன் படைநடவடிக்கை ஆரம்பம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஹாது சுலபி (சூறாவளி) இராணுவ நடவடிக்கை விடுதலைப்புலிகளுக்கு எதிராக நேற்று ஆரம்பிக்கப்பட்டதாக பிரிகேடியர் தளின் அமுனுகம நேற்று கொழும்பில் நடைபெற்ற வாராந்த பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார். இதில் 3,000 ராணுவத்தி 4-ம்பக்கம் பார்க்க)

## பிரதமர் ரணில் தலைமையில் இனப்பிரச்னைத் தீர்வுக்கு 5 அம்சதிட்டம் தயாராகிறது!

(கொழும்பு)

இனப்பிரச்னைக்கு புதிய அரசியல் தீர்வு ஒன்று காண்பதற்கு அரசு புதிய ஐந்து அம்சத்திட்டம் ஒன்றை தற்போது தயாரிப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் நேற்று கொழும்பில் நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்தில் இந்த ஐந்து அம்சத்திட்டம் தயாரிக்கப் படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப் பட்டது.

- வி-இ

## யாழ். ஆஸ்பத்திரியில் பிறப்புப் பத்திரங்கள் பெருமளவில் தேக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ் வைத்தியசாலை வெளி நோயாளர் பகுதியில் இயங்கி வரும் பிறப்பு, இறப்பு பதிவாளர் காரியாலயத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்ட பிறப்பு பத்திரங்களை உரியவர்கள் பெற்றுக் கொள்ளாததால் அவை அங்கு தேங்கிக்கிடக்கின்றன.

1989ம் ஆண்டு முதல் 1993ம் (4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் சுரேஷா புத்தகசாலை, 25, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (ஏ-3185)

### தவறிவிட்டது

முத்துலிங்கம் சிவகலிராசா 470593709V கொண்ட அடையாள அட்டை வல்லை வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சுற்றோவளம் இடம் பெயர்ந்தோர் முகாமில் கையளித்தால் சன்மானம் வழங்கப்படும். (ஏ-3192)

### பெயர் மாற்றம்

யாழ் நகரை வசிப்பிடமாகக் கொண்ட "கணேசா" ஆகிய எனது பெயர்

K.V. Kanesalingam

என மாற்றம் செய்யப்பட்டுள்ளது. என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்

K.V. Kanesalingam

298, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்

(இ-187)


### டிப்ளோமா பரீட்சை

(திருநெல்வேலி)

பட்டப்பின்படிப்பு டிப்ளோமாப் பரீட்சைகள் நாளை மறுதினம் 12ம், 13ம் திகதிகளில் நடைபெற உள்ளது.

இப்பரீட்சைக்குத்தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டுவிட்டன. இப்பரீட்சைக்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. திட்டமிட்டபடி இப்பரீட்சைகள் நடைபெற உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (157-இ)

### இராசி பலன்

11-06-1993

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு வைகாசி 29)

ஸப்தமி மு. இ. 11-02 வரை, சதயம் மு. இ. 9-14 வரை, சித்தயோகம், இராகு காலம் காலை 10-22 முதல் 11-52 வரை, சுபநேரம் காலை 5-52 முதல் 7-32 வரை.

மேஷம்: குடும்ப சுகம், பணவரவு, தொழில் உற்சாகம்.

இடபம்: கல்வி மேன்மை, உபேச ஜனம், புத்தி மேன்மை.

மிதுனம்: சந்தோஷக் குறைவு, குடும்ப அலைச்சல், பணமுடை.

கடகம்: நானாவித துன்பம், கடன்சுமை, வேலைக் கஷ்டம்.

சிங்கம்: மேலதிகாரிகள் நன்மை, விருந்துண்ணல், புகழ்.

கன்னி: காரிய வெற்றி, குடும்ப சுகம், நண்பர் உதவி.

துலாம்: தொழில் போட்டி, விரோதிகள் கவலை, யோசனை.

விருச்சிகம்: வீண் முயற்சி, சகோதரர் வகை துயரம், அசதி.

தனுசு: நம்பி ஏமாறுதல், பெரியோர் ஆதரவு, அதிக வசயம்.

மகரம்: அன்னியர் வெறுப்பு, இனசன விரோதம், கெட்டபெயர்.

கும்பம்: அதிகார வாழ்வு, வாகனசுகம், பிறர் பாராட்டு.

மீனம்: வைத்திய செலவு, பிறர் தயவு, மனக்குறை.

— ஜோஸ்யர்

# நெருக்கடி காலத்தில் உதவும் யாழ். வன்னி தொடர்பு சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கும் வன்னிக்கும் இடையே போக்குவரத்து சீரின்மையைக் கருத்தில் கொண்டு யாழ். வன்னி தொடர்பு சேவை செயலகங்கள் யாழ். நகரில் மானிப்பாய் வீதியில் ஈழநாடு காரியாலயத்திற்கு அண்மையிலும் (முன்னைய காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கு அண்மையில் உள்ள கட்டிடத்தில்) கிளிநொச்சியில் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு அண்மையில் உள்ள கட்டிடத்திலும் தகவல் கையேற்கும் கருமபீடம், ஓமந்தை சோதனை நிலையத்திலும் வாரத்தில் ஏழு நாட்கள் காலை 9-00 மணி தொடக்கம் நண்பகல் 12-30 வரையும் மாலை 1-30 மணி தொடக்கம் 5 மணிவரையும் நடைபெற்று வருகின்றது.

இச்செயலகத்தால் தகவல்கள் ஏற்றுக்கொள்ளப்படும்போது சலுகை அடிப்படையில் அமைந்த தகவல்கள் வியாபார நோக்கத்தின் அடிப்படையில் அமைந்த தகவல்கள் எனவும் இவை இரண்டுள்ளும் அடங்காத தகவல்களும் வழமையான தகவல்களாக கொள்ளப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும்

பாரதூரமான நோய்வாய்ப்பட்டிருக்கும் செய்திகளும், மரண அறிவித்தல் செய்திகளும் குறிப்பிட்ட மாவட்ட வைத்திய அதிகாரியினால் அல்லது பிரதேச சிற்றூர் பொறுப்பாளர் அல்லது கிராமசேவகர் உறுதிப்படுத்தப்பட்டிருப்பின் இத்தகவல் சலுகை அடிப்படையில் அமைந்த தகவல்களாக கொள்ளப்படும் 15ற்கு மேற்படாத சொற்களுக்கு ரூபா 15ம் மேலதிகமாக ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 2ம் அறவிடப்படும்.

தத்தமது வியாபார நோக்கத்திற்கான தகவல்களும் கையளிப்போரிடம் இருந்து ஏற்றுக்கொள்ளப்படும் தகவல்கள் வியாபார தகவல்கள் என்ற அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்படும்போது முதல் 10 சொற்களுக்கும் ரூபா 100ம் மேலதிக ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 15-ம் கட்டணமாக அறவிடப்படும். சலுகை அடிப்படையான தகவலிற்குள்ளும் வியாபார நோக்கத்தின் அடிப்படையாகக் கொண்ட தகவலிற்குள்ளும் அடங்காத மற்றைய வழமையான தகவலிற்கு முதல் 10 வரையிலான சொற்களுக்கு ரூபா 50ம் மேலதிகமாக ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 5ம் கட்டணமாக அறவிடப்படும்.

மற்றும் தகவல் பொறுப்பேற்கப்படும் நேரத்திலிருந்து 72 மணிநேர இடைவெளிக்குள் விநியோகிக்கப்படும். தகவல்கள் சாதாரண கட்டண விநியோகங்களாக எடுத்துக் கொள்ளப்படும் தகவல் பொறுப்பேற்கப்படும் நேரத்திலிருந்து 24 மணிநேர இடைவெளியில் விநியோகிக்கப்படும் தகவல்கள் விரைவு விநியோகமாகக் கொள்ளப்படும். விரைவு விநியோகத்திற்கு, சாதாரண விநியோகத்திற்கான கட்டணத்துடன் மேலதிகமாக 500 ரூபா அறவிடப்படும்.

வன்னிப்பகுதி விநியோகங்கள் கண்டிவீதியை மையமாக வைத்தே விநியோகிக்கப்படும். கிளிநொச்சி நகரத்திலிருந்து 3 மைல்கள் சுற்று வட்டாரத்துள்ள பகுதிகளுக்கும் குஞ்சுப் பரந்தன் பகுதிக்கும் விநியோகங்கள் மேற்கொள்ளப்படும்

தொடர்பு தகவல்களை கையளிப்போர் அதற்கென உள்ள படிவங்களை சரியான முறையில் பூர்த்திசெய்து அலுவலக நேரத்தில் ஒப்படைத்து இச்சேவை மூலம் பொதுமக்கள் பயன் பெறும் நோக்குடன் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு இத்தகவலை அறியத்தருகிறது


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1992/93 கல்வியாண்டிற்கு பின்வரும் கற்கை நெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வு நாடியாக பதிவு செய்ய விருப்புடைய தகைமை பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

1. வர்த்தக முதற் கற்கைநெறி
2. கலை முதற் கற்கை நெறி
3. பொதுக்கலைமாணி பகுதி I
4. சிறப்புக் கலைமாணி பகுதி I
5. வர்த்தகமாணி பகுதி I

பின்வரும் பாடங்களில் மாத்திரம் சிறப்புக்கலைமாணி கற்கைநெறிக்குப் பதிவு செய்து கொள்ளலாம். (இந்து நாகரிகம், வரலாறு, புவியியல், பொருளியல், மெய்யியல் அரசறிவியல், தமிழ், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரிகம்).

விண்ணப்பப் படிவங்களும், உரிய விபரங்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வெளிநிலைப் பதிவு தேர்வு அலுவலகத்தில் இருந்து நேரடியாகவோ, தபால் மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவத்தையும், பாடத்திட்டத்தின் பிரதியையும் நேரடியாக பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிறுப்பளிடம் 50/-ரூபா செலுத்திய மைக்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும். தபால் மூலம் விண்ணப்பப் படிவத்தையும், பாடத்திட்டத்தின் பிரதியையும் பெறவிரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிதியாளருக்கு எழுதப்பட்ட காசுக்கட்டளை / தபாற் கட்டளையுடன் சுய முகவரியிட்டு ரூபா 12/- பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 X 20 ச. மீ. அளவுடைய தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

1991/92 கல்வியாண்டிற்காக ஏற்கனவே பதிவு செய்துள்ளோருக்கு இவ்வறிவித்தல் ஏற்புடையதல்ல.

முடிவு திகதி 16 யூலை 1993.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

11-03-1993.

(எ-3191)


## வலுக்குறைந்தோர் நலன்புரி அமைப்புக்களை ஒருங்கிணைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள அரசு, அரச சார்பற்ற வலுக்குறைவுற்றோரின் நலன்புரி அமைப்புக்களை ஒருங்கிணைக்கும் நோக்குடன் மாவட்டரீதியான குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட வலுக்குறைந்தோரின் புனர்வாழ்வுக்கான வழிமுறைகளை இனங்காண்பது தொடர்பான ஆய்வுப்பட்டறையின் இறுதியிலே இக்குழு அமைக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் வலுக்குறைவுற்றோருக்கான சேவை வழங்கலின் இரட்டிப்பு தன்மையை நீக்கவும் வலுக்குறைவுற்றோருக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளில் சமவாய்ப்பு அளிக்கவும் இக்குழு அமைக்கப்பட்டதன் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஏழுபேர் கொண்ட தற்காலிக குழு ஒன்று தற்போது அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு இம்மாதம் 21-ம் திகதி கூடி உத்தேச பணிகள் கட்டமைப்புகள் பற்றி தீர்மானிக்கவுள்ளது. (மி)

## முன்னோடிப் பரீட்சை விண்ணப்பப் படிவம்

(திருநெல்வேலி)

க. பொ. த சாதாரண தர மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் கோட்டக்கல்வி அலுவலகங்களினூடாக பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

விஞ்ஞான பாடத்திற்கு செய்முறைப் பரீட்சையும் நடாத்தப்படவுள்ளது. இப்பரீட்சையை தமிழீழ கல்விக்கழகம் நடாத்துவது குறிப்பிடத்தக்கது. (157)

## தமிழில் புதிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும்

(யாழ்ப்பாணம்)

தமிழ், தமிழர் பண்பாடு என்பன ஆராயப்பட வேண்டியதன் அவசியத்தை நன்கு உணர்ந்த வண. தனிநாயகம் அடிகளார் தமிழாராய்ச்சி மாநாட்டு என்ற நிறுவனத்தை ஏற்படுத்தியுள்ளதோடு தமிழ்ப் பண்பாடு என்ற உலகளாவிய இதழையும் வெளிட்டார்.

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற வண. தனிநாயகம் தமிழ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் பல்கலைக்கழக தமிழ்ப் பேராசிரியரும் நுண்கலைத் துறைத் தலைவருமான திரு. கா. சிவத்தம்பி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; தமிழ் ஒரு சமயத்துக்குரிய மொழி அல்ல அது பல்வேறு சமயங்களுடன் ஒன்றிப் போன ஒரு மொழி. எனவே தனிநாயகம் அடிகளாரைப் பின்பற்றி தமிழில் புதிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும். (க)

## யாழ். மாவட்டத்தில் பொன்னான மண் இருக்கிறது

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் நல்ல மண்வளம் இருக்கிறது. இதனை பொன்னான மண் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுவார்கள். இவ்வாறு கெயர் நிறுவனத்தின் யாழ். மாவட்ட பணிப்பாளர் திரு. ச. கிருஷ்ணபிள்ளை தெரிவித்தார்.

அறவழி—கெயர் யு. எஸ். எய்ட்ஸ் விவசாயத் திட்டத்தில் இணைந்து பயன்பெற்ற விவசாயிகளுடனான சந்திப்பு ஒன்று அறவழிப் போராட்டக்குழு பணிமனையில் நடைபெற்றது.

திரு. ச. தங்கராசா தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே கெயர் நிறுவனப் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது: செம்மண், மணல் மண் ஆகிய இரு மண்ணும் யாழ். மாவட்டத்தில் இருக்கின்றன. இம்மண் பயிர்ச்செய்கைக்கு உகந்ததாக இருக்கிறது.

இந்த மண்ணில் உற்பத்தி செய்யப்படும் பயிர்கள் நல்ல பலனைத் தருகின்றன. கூட்டெரு, மாட்டெரு போன்ற இயற்கையான பசளைகளைப் பயன்படுத்துவதன் மூலம் மேலும் இம்மண்வளம் செழிக்கச் செய்யலாம்

கெயர் நிறுவனத் திட்ட மேற்பார்வையாளர் குமாரவேலுவும் இச்சந்திப்பின்போது உரையாற்றினார். இச்சந்திப்பில் கலந்துகொண்ட விவசாயிகள் கருத்துகளை தொகுத்து திரு. என். கே. துரைசிங்கம் உரை நிகழ்த்தினார். செல்வி க. பானுமதி நன்றியுரை கூறினார்.

## பென்சன் வவுச்சர்

(மானிப்பாய்)

றெயில்வே திணைக்கள ஊழியர்களின் மே மாதத்திற்குரிய பென்சன் வவுச்சர்கள் யாழ் செயலகத்திலிருந்து நேற்று முன்தினம் அந்தந்த வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (71 - கி)

## 30 பாலர் பாடசாலைகளுக்கு தரும நிதியம் உதவி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வியாபாரி மூலை விநாயகர் தரும நிதியம் 30 பாலர் பாடசாலைகளைச் சேர்ந்த 700 பாலர் பாடசாலை மாணவர்களுக்கு சுமார் 35,000 ரூபா பெறுமதியான சிலேற்றுக்களையும், சிலேற் பென்சில்களையும் இலவசமாக வழங்கி பாலர் பாடசாலை மாணவர்களுக்கு உதவியுள்ளது.

பேருட் நிறுவனத்தின் உதவியுடன் விநாயகர் தரும நிதியம் இச்சிலேற்றுகளையும், பென்சில்களையும் கப்பல்மூலம் கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்குக் கொண்டுவந்திருந்தது. (52)

## 1000க்கும் மேற்பட்ட புத்திசாலிகளின் வரிசையில் நீங்களும் இடம்பெற விரும்புகிறீர்களா?


## நவீன தொழில் நுட்பத்துடனான

# இரட்டைச் சூட்டடுப்புக்கள்

விறகுத் தட்டுப்பாடு — விறகு விலையேற்றம் — போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வு காண

இதோ!

## இரட்டைச் சூட்டடுப்பு



★ உடனடிப் பலன் தருவதால் இப்போது குடாநாடெங்கும் வெகு வேகமாக கட்டிக் கொடுக்கப்படுகின்றன.

- சமையலின்போது கரியில்லாத, புகையில்லா இந்த நவீன இரட்டைச் சூட்டடுப்புக்கள் உங்கள் சமையலின் நேரத்தை மீதமாக்குகின்றன.
- ஊதாமலே எரிவதுடன் தீப்பொறிகள் விறகு வீழ்தல் போன்றவற்றிலிருந்து உங்களுக்கு பாதுகாப்பினைத் தருகின்றது.
- விறகுக்கான செலவில் 50% மீதப்படுத்தும் இரட்டைச் சூட்டடுப்புக்களை,

  ஃ வீடுகள்
  ஃ உணவுச் சாலைகள்
  ஃ பாடசாலை விடுதிகள்
  ஃ கோயில் மடங்கள்

போன்ற எந்த இடமாக இருந்தாலும் கட்டிப் பயன்பெறலாம்.

## எனவே எதற்கும் யோசிக்காமல்

★ நீங்கள் செய்யவேண்டியது மிகச் சுலபமான ஒரே ஒரு செயற்பாடு தான்
★ பின்வரும் நிறுவனங்கள் ஏதாவது ஒன்றில் உங்கள் பெயர் விலாசத்தினையும் எந்தத் திகதியில் அடுப்பு கட்டித்தரப்பட வேண்டும் என்பதையும் குறிப்பிடுங்கள்
★ அந்தத் திகதியில் இரட்டைச் சூட்டடுப்பு உங்கள் வீட்டுக்கு வந்துவிடும்.

தொடர்பு முகவரிகள்:

**சக்திப் பகுதி,**
**தமிழீழ**
**பொருண்மிய**
**மேம்பாட்டுக் கழகம்,**
காங்கேசன்துறை வீதி,
தாவடிச் சந்தி,
தாவடி.

கண்ணும்பு விற்பனை நிலையம்,
உட்கட்டுமானப் பகுதி,
குளப்பிட்டிச் சந்தி,
கொக்குவில்.

உதவும் கரங்கள்,
அரசுகுள வீதி (ஸ்ரான்லி வீதி),
யாழ்ப்பாணம்.

யாழ். மாவட்டம்
மாவட்ட அலுவலகம்,
த. பொ. மே கழகம்
யாழ் மாவட்டம்,
கோண்டாவில்.



### வலிகாமம்

★ கோட்ட இணைப்பாளர்
அலுவலகம்,
வலிகாமம் கோட்டம்
புத்தூர் வீதி, சுன்னாகம்.

★ வட்டத் தொடர்பாளர்
அலுவலகம்
(கோப்பாய்
சுன்னாகம் வீதி, புத்தூர் சந்தி,
புத்தூர்.

★ வட்டத்தொடர்பாளர்
அலுவலகம்
(உடுவில்)
மானிப்பாய் வீதி, மதவடி,
உடுவில்.

★ வட்டத்தொடர்பாளர்
அலுவலகம்
(சண்டிலிப்பாய்)
கட்டுடைச் சந்தி,
மானிப்பாய் மேற்கு.

★ வட்டத்தொடர்பாளர்
அலுவலகம்
(சங்கானை
பிரதான வீதி, சங்கானை.

★ வட்டத்தொடர்பாளர்
அலுவலகம்
(நல்லூர்)
பொற்பதி வீதி, கொக்குவில்,
நல்லூர்.

### வடமராட்சி

★ கோட்ட இணைப்பாளர்
அலுவலகம்,
வடமராட்சி கோட்டம்
மாலி சந்தி, நெல்லியடி.

★ வட்டத்தொடர்பாளர்
அலுவலகம்
(பருத்தித்துறை)
சந்தமுருகேசனார்
சிலையடி, பிரதானவீதி,
மந்திகை.

★ வட்டத்தொடர்பாளர்
அலுவலகம்
(கரவெட்டி)
யாழ்.வீதி, நெல்லியடி,
கரவெட்டி.

### தீவகம்

★ கோட்ட இணைப்பாளர்
அலுவலகம்
தீவகக்கோட்டம்,
நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

★ வட்டத்தொடர்பாளர்
அலுவலகம்
(தீவகம்)
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

### தென்மராட்சி

★ கோட்ட இணைப்பாளர்
அலுவலகம்
தென்மராட்சி கோட்டம்,
கொடிகாமம்.

★ வட்டத்தொடர்பாளர்
அலுவலகம்
(பளை)
பளை நகரம், பளை.

★ வட்டத்தொடர்பாளர்
அலுவலகம்
(சாவகச்சேரி)
இலங்கைவங்கி அருகாமை,
பிரதான வீதி, சாவகச்சேரி.

★ வட்டத்தொடர்பாளர்
அலுவலகம்
(கொடிகாமம்)
கோட்ட செயலகம்,
கொடிகாமம்.

★ வட்டத்தொடர்பாளர்
அலுவலகம்
(கைதடி)
ஆயுள்வேத வைத்தியசாலை
முன்பாக, கைதடி தெற்கு,
கைதடி.

### கடற்புலிகள் மாவட்டம்

★ கோகுலம்
கால்நடை உணவு உற்பத்தி நிலையம்,
ஊறணி, வல்வெட்டித்துறை.

### நிறுவனங்கள்

★ முகாமையாளர்
காமதேனு விவசாய கால்நடைப் பண்ணை,
சுன்னாகம்.

★ முகாமையாளர்
மதுரம் பேக்கரி,
பலாலி வீதி, உரும்பிராய்.

★ முகாமையாளர்,
தேன்துளி
நீர்வேலி மத்தி, நீர்வேலி.

★ முகாமையாளர்
லெப் செங்கண்ணன் விளைபூமிப் பண்ணை,
நீர்வேலி.

★ முகாமையாளர்
காமாட்சி இரும்புத் தொழிலகம்
நீர்வேலி.

★ முகாமையாளர்
உதயம் அங்காடி,
ஆரியகுளச் சந்தி, யாழ்ப்பாணம். (ஏ-3194)


## சுகவாழ்வு விரிவுரை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புற நிலைப் படிப்புகள் அலகு வழங்கி வரும் "சுகவாழ்வு" பொது விரிவுரைத் தொடரின் 11வது அமர்வு நாளை சனிக்கிழமை 12ம் திகதி காலை 9 மணி முதல் 12 மணிவரை கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

பேராசிரியர் வி. தர்மரத்தினம் தலைமையின் கீழ் இடம்பெறவுள்ள 11வது அமர்விலே, "பாதுகாப்போம் பல், ஈறு, வாய்" எனும் தலைப்பில் வைத்திய நிபுணர், வைத்திய கலாநிதி எம். சுப்பிரமணியமும், "சுகநலம் பேணல் கண், காது, மூக்குத் தொண்டை" எனும் தலைப்பில் வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தனும் விரிவுரைகளை வழங்கவுள்ளார்கள். (நி)

## இன்று

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் இன்று "நக்கீரரும் திருமுருகாற்றுப்படையும்" என்ற பொருளில் நெல்லியடி ம. வி. பிரதி அதிபர் திரு. கி. நடராசா சொற்பொழிவாற்றுவார். (ரி

0 0 0

(அளவெட்டி)

மானிப்பாய் புனித அந்தோனியார் வருடாந்த திருவிழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு மானிப்பாய் பங்குத்தந்தை அருட்திரு அன்ரன் இராசநாயகம் அடிகள் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. இத் திருவிழா எதிர்வரும் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமைவரை நடைபெறும். கூட்டுத் திருப்பலி, புனித அந்தோனியார் திருச்சொரூப பவனி ஆகியவற்றுடன் நிறைவுபெறுகின்றது.

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப்போட்டி இன்று 11ம் திகதியும் நாளை 12ம் திகதியும் யாழ். இந்துமகளிர் கல்லூரியில் இடம்பெறும். கொத்தணி தேசிய தனியார் பாடசாலைகளில் இடம்பெற்ற தமிழ்த்தின போட்டிகளில் முதலாமிடம் பெற்ற போட்டியாளர்கள் இதில் கலந்து கொள்வார்கள்.

0 0 0

(யாழ்ப்பாணம்

யா/உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 11-ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 00 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் திரு ந. அனந்தராஜ் தலைமையில் நடைபெறும். இப்போட்டியின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட திட்ட பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் கலந்து கொள்கின்றார்.

0 0 0

(பருத்தித்துறை)

வதிரி வடக்கு மெதடிஸ் மிஷன் தமிழ் வித்தியாசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி பாடசாலை (விளையாட்டு மைதானத்தில் அ... திரு. எஸ். சதானந்தன் ...மையில் இன்று நட...வுள்ளது.

0 0

(பருத்தித்து...

பருத்தித்துறை ...தினி சமேத ... ஆலய இவன் மகோற்சவம் திகதி கொ... ஆரம்பமாகி...

25-ம் தி... மும். ஆ... மான 26 ... சமுமும்

# தந்தை செல்வாவைக் கேலி செய்ததால்தான் பிரபாகரனை துப்பாக்கிமுனையில் சந்திக்கிறீர்கள்!

## - அஷ்ரப் அரசு மீது ஆவேசம்

(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்னை பற்றி காலஞ்சென்ற எஸ். ஜே. வி. செல்வநாயகம் போன்ற நல்ல மனிதர்கள் இந்த சபையில் அன்றுபேசும் போது நீங்கள் கைதட்டிகேலி செய்து சிரித்தீர்கள். அதனால் தான் இன்று பிரபாகரன் போன்ற இளைஞர்களை நீங்கள் துப்பாக்கி முனையில் சந்திக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஏ. எச். எம். அஷ்ரப் நேற்று நாடாளுமன்றத்தில் பேசும் போது கூறினார்.

உள்ளூராட்சி மன்றங்களின் புதிய சட்டதிருத்த மசோதா மீது நேற்று நாடாளுமன்றத்தில் ஜனாப் அஷ்ரப் உரையாற்றும்போது மேலும் கூறியதாவது:

கடந்த 20 வருடங்களாக வடக்கு-கிழக்குப் பகுதிகளில் எந்த ஒரு உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்களும் நடைபெறவில்லை. இப்பகுதிகளில் எந்த ஒரு அபிவிருத்தி வேலைகளும் நடைபெறவில்லை. கடந்த நாலரை வருடங்களாக நாங்களும் இந்த சபையில் தமிழ் மக்களின் பிரச்னைகள் பற்றி பேசுகின்றோம், ஆனால் நீங்களோ அதுபற்றி எதுவித அக்கறையும் செலுத்தாமல் உங்கள் பதவிகளை கட்டிக் காத்துவருகின்றீர்கள்.

இப்படிப்பட்ட அரசியல்வாதிகள் அங்கம் வகிக்கும் இந்த நாடாளுமன்றத்துக்கு நீங்கள் தொடர்ந்தும் செல்ல வேண்டுமா? என்று எனது தொகுதி மக்கள் என்னைப் பார்த்து தற்போது கேட்கின்றார்கள் என்று ஜனாப் அஷ்ரப் கூறினார். (வி)

## ஒரு முறை கைதானவர் மீண்டும் கைதாகமாட்டார்

(கொழும்பு)

கொழும்பில் ஒருமுறை கைதுசெய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் மீண்டும்ஒருமுறை கைது செய்யப்படமாட்டார்கள் என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இவர்கள் விடுவிக்கப்பட்டது(ம்) பொலிசார் இவர்கள் குறித்து ஒரு அத்தாட்சிப் பத்திரத்தை வழங்குவார்கள்.

இதேவேளையில் தமிழர் கைதுசெய்யப்பட்டதும் தமது வாக்குமூலங்களை அவர்கள் தமிழில் வழங்குவதற்கான வசதிகளையும் பாதுகாப்பு அமைச்சு அவர்களுக்குசெய்து கொடுத்துள்ளது. (இ)

## தமிழகத்தில் போராளிகள் தங்கியுள்ள முகாம்களை சுற்றி காவல்!

(சென்னை)

தமிழகத்தில் இலங்கைப் போராளிகள் தங்கியிருக்கும் நான்கு சிறப்பு முகாம்களைச் சுற்றி பலத்த காவல் போடப்பட்டுள்ளதாக மாநிலவருவாய் துறை ஆணையாளர் திரு. இ. என். இராமதாஸ் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் அகதிமுகாம்களிலுள்ள இலங்கை அகதிகளைச் சந்திப்பதற்கு வெளி ஆட்கள் எவருக்கும் அனுமதியில்லை என்றும் இந்த அகதிகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் அரசு செய்துகொடுக்கிறது என்றும் அவர் கூறினார்.

இலங்கைப் போராளிகள் சிறைகளிலிருந்தும், சிறப்பு முகாம்களிலிருந்தும் தப்பி யோடுவதாலேயே பலத்த காவல் போடப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (சி-இ)

## பிரதமர் ரணில் கலந்து கொள்வார்

(கொழும்பு)

பாரிஸில் இம் மாதம் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் குழுக்கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழு கலந்து கொள்ளும் என அமைச்சரவைப் பேச்சாளர் ஹரோல்ட் ஹேரத் தெரிவித்தார். (க-இ)

### யாழ். ஆஸ்பத்திரி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டுவரையிலான பிறப்புப் பத்திரங்களே இவ்வாறு தேங்கிக்கிடக்கின்றன.

இந்த பிறப்புப் பத்திரங்களை உரியவர்கள் வந்து பெற்றுக்கொள்ளும்படி கேட்கப் பட்டுள்ளது. (56-இ)

### தமிழரை கைது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்தார்கள்.

இதேவேளையில் கொழும்பில் தமிழர் கைதாவது பற்றி ஆராய்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் நேற்று மாநாடு ஒன்று நடைபெற்றது. அந்த மாநாட்டிலேயே தமிழர் கைது பற்றி புதிய நடைமுறை குறித்து முடிவு எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வி-இ)

### பூநகரிப் பாதை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரியவருறது

பேச்சுவார்த்தையின் பெறுபேறுகள் குறித்து அரசின் உயர்மட்ட அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்குமுகமாக லாநிதி பீற்றர் நீக்கிலஸ் நேற்றுமாலையே கொழும்பு பயணமாகியுள்ளார்.

அனேகமாக அடுத்தவார மளவில் மீண்டும் அவர் யாழ்ப்பாணம் வந்து இறுதிக்கட்ட பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பார் என்றும் தெரிய வருகிறது

இப்பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச் செல்வன் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-இ)

### தமிழ் மக்களின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் காலை யாழ். ஆயர் இல்லத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றிய தூதுக்குழுவினர் மேலும் தெரிவித்ததாவது!

இங்கு பாதிக்கப்பட்ட இடங்களில் பாதிக்கப்பட்ட மக்களுடன் நாம் கலந்துரையாடினோம். அம்மக்கள் அனுபவிக்கும் சொல்லொணா துயரங்கள் பற்றி நாம் நன்கு அறிந்து கொண்டோம்.

இங்கும் சரி, தென்னிலங்கையிலும் சரி மக்கள் சமாதானத்தையே விரும்புகிறார்கள்.

நாம் யாழ்ப்பாணம் விஜயம் செய்யுமுன்னர் முப்பதுக்கும் மேற்பட்ட பௌத்தமதக் குருமார்களை சந்தித்து இனப் பிரச்னை விவகாரம் குறித்து கலந்துரையாடினோம். அத்துடன் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளை சந்திக்க முயன்றோம். எனினும் அம்முயற்சி வெற்றியளிக்கவில்லை.

கிளிநொச்சி, வவுனியா, திருமலை, மன்னார், மட்டக்களப்பு ஆகிய பகுதிகளுக்கும் தூதுக்குழுவின் ஏனைய பிரதிநிதிகள் விஜயம் செய்து அங்குள்ள நிலைகுறித்து அறிந்து கொண்டதாக தெரிவித்தனர்.

### பூநகரி விவகாரம்

பூநகரிப் பாதை திறப்பு மற்றும் வடபகுதி மீது அரசினால் விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையை நீக்குவது குறித்து ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவீர்களா என பத்திரிகையாளர் கேட்டதற்கு தாம் இவ்விடயம் பற்றி ஸ்ரீலங்கா அமைச்சர்களுடன்பேச்சுவார்த்தை நடத்துவோம் என்றனர் (க-இ157)

### வடக்கு-கிழக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆயர் ஏ செல்வநாயகம் தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு தெரிவித்ததாவது: சிங்களப் பிரதேசங்களில் தமிழர் குறித்தும் தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களவர் குறித்தும் ஒருவருக்கொருவர் மத்தியில் சந்தேகம் இருப்பதாகத் தெரியவில்லை. நாற்பது வருடகாலம் இரு இனங்களும் சகோதரர்களாக வாழ்ந்துள்ளோம் என்று கூறுகிறார்கள்.

தென் இலங்கையில் வடக்கு—கிழக்குப் பிரச்னை தீர்க்கப்படவேண்டுமென்று தான் மக்கள் கருத்து தெரிவித்துள்ளார்கள்.

அமைச்சர் தொண்டமானின் தீர்வுத்திட்டம் பற்றியும் அங்கு போய் சம்பந்தப் பட்டவர்களோடு பேசவுள்ளோம்.

பத்திரிகையாளர் மாநாட்டில் எடுத்துக் கூறப்பட்ட கருத்துக்களை தென்இலங்கை மக்களுக்கும் தெளியப்படுத்தவுள்ளோம் என்றார். —சு-இ

### மன்னாரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

இத்தாக்குதலின்போது ரி-56 ரக துப்பாக்கிகள் 3, இதற்குரிய ரவைக் கூடுகள்-11, நடுத்தர ரவைகள்- 1303, ஏ. கே. ரவைகூடு தாங்கிகள்-04, 5.56 மில்லி மீற்றர் ரவைகள்-164, 84 எஸ். ரக ரவைக் கூடு-1, எம்-4 ரக கைக்குண்டு 14, செயின் பெட்டிகள்-04, தலைக்கவசம்-1 ஆகிய இராணுவ உபகரணங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப் பட்டன.

இந்தத் தாக்குதல் நடைபெற்றதாகவும் பொலிசார் தரப்பில் ஏற்பட்ட உயிரிழப்புகள் மற்றும் சேதங்கள் பற்றியும் சிரேஷ்ட இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கமனவும் ஒப்புக்கொண்டார். (க-ரி-இ)

### மட்டக்களப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் விமானப்படை விமானங்களும் கடற்படை படகுகளும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

வாகரை, மாங்கேணி, நயன்கேணி, கதிரவெளி ஆகிய பகுதிகளில் இவ்இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்

இவ்இராணுவ நடவடிக்கையின்போது இரு பாதுகாப்புப் படையினர் காயமடைந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தப் பகுதியில் நாளை சனிக்கிழமை வரை ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டிருக்கிறது. —க-இ

## இரத்மலானையில் வேலைநிறுத்த ஊழியர் மீது பொலிஸார் தாக்கு!

(கொழும்பு)

இரத்மலானையில் உள்ள இந்திய கம்பனியொன்றுடன் கூட்டிணைந்து இயங்கும் பற்றறி தொழிற்சாலையொன்றில் வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர்களை கண்ணீர்ப்புகைக் குண்டுகள் வீசி பொலிசார் கலைத்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் நிகழ்ந்தது.

இந்நிறுவனத்தில் பணி புரியும் ஐந்து தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்ததை அடுத்து வேலைநிறுத்தப் போராட்டத்தை தொழிலாளர்கள் தொடக்கியிருந்தனர்.

இதேவேளையில் வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளி ஒருவர் புகைபோக்கியொன்றின் மேல் ஏறி தன்னை வேலைக்கு மீண்டும் சேர்த்துக் கொள்ளாவிடில் கீழே விழுந்து தற்கொலை செய்யப்போவதாக அச்சுறுத்தினர். —கே-இ

## பொஸ்னியாவுக்கு அமெரிக்க படைகளை அனுப்ப முடிவு

(லண்டன்)

பொஸ்னியாவுக்குள் தனது படைகளை அனுப்பிவைப்பதற்கு அமெரிக்கா முன்வந்துள்ளது.

பொஸ்னியாவில் தற்போது தீவிரமான யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருப்பதினால் அங்குள்ள முஸ்லீம்களுக்கு பாதுகாப்பு வழங்கிவரும் ஐ நா. சமாதானப்படைகளால் சேர்பியப்படைகளின் தாக்குதல்களை சமாளிக்க முடியவில்லையென்று ஐ. நா. படைத்தளபதிகள் தெரிவித்ததைதொடர்ந்தே அமெரிக்கப் படைகளை ஐ.நா. பொஸ்னியாவுக்கு அனுப்ப முனைந்துள்ளது.

இதேநேரம் பொஸ்னியாவுக்குள் தமது போர் விமானங்களை அனுப்புவதற்கும் பல நாடுகள் முன்வந்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. —வி-இ

### கடற்படை ரோந்து

(புலோலி)

வடமராட்சி கடல் பிரதேசத்தில் கடந்த இரு தினங்களாக கடற்படைப் படகுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. —61-இ

### போர்க்கைதிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யும் என இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கமன தெரிவித்துள்ளார்.

இதேவேளையில்—

யாழ்ப்பாணத்தில் விடுதலைப்புலிகளால் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் 39 பொலிசாரை விடுவிப்பதற்கு அரசாங்கம் தெரிவித்த ஆலோசனையை விடுதலைப்புலிகள் நிராகரித்துவிட்டதாக கூட்டுப்படை தலைமைச் செயலகம் நேற்று அறிவித்ததாக ரூபவாஹினி தெரிவித்தது.

இதுபற்றி ரூபவாஹினி மேலும் தெரிவித்ததாவது:

பாதுகாப்புப் படையினர் தடுத்துவைத்திருக்கும் 60 விடுதலைப்புலிகளை அரசு விடுதலை செய்வதாகவும் அதற்குப் பதிலாக விடுதலைப்புலிகள் தடுத்துவைத்திருக்கும் 39 பொலிசாரையும் விடுதலை செய்யும்படி அரசு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக விடுத்த கோரிக்கையை விடுதலைப்புலிகள் நிராகரித்துவிட்டனர்.

பாதுகாப்புப்படையினர் தடுத்து வைத்திருக்கும் விடுதலைப்புலிகள் என சந்தேகிக்கப்படும் அனைவரினதும்பெயர் பட்டியலை தரும்படி அரசு விடுத்த கோரிக்கையை விடுதலைப்புலிகள் நிராகரித்துவிட்டனர். (வி-இ)

### புலிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாக விடுதலைப்புலிகளின் பாதுகாப்பில் உள்ள 39 இராணுவ மற்றும் பொலிஸ் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக்காலை தம்மை சந்தித்த சர்வதேச சமாதானக் குழுவினரிடம் அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

நேற்றுக்காலை 9.30 மணி முதல் 10 மணிவரை நடைபெற்ற மேற்படி சந்திப்பில் சமாதான தூதுக்குழுவினரும் போர்க்கைதிகளும் பரஸ்பரம் கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர்

இச்சந்திப்பின்போது கைதிகள் அனைவரும் கையெழுத்திட்ட மகஜர் ஒன்றும் தூதுக் குழுவினரிடம் கையளிக்கப் பட்டதாம்.

மேற்படி மகஜரில் கைதிகளின் உண்ணாவிரதம் பற்றியும் குறிப்பிடப் பட்டிருந்ததாம்.

இச்சந்திப்பின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் திரு. இளம் பருதியும் கலந்து கொண்டார் (க-கி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு யூன் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the Genneral Post office, Sri Lanka under Licence Number B/10336/B